**மண்முனை பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 15 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 07 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்.

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் பிரகாரம் அக்காசுப்பாய்ச்சல் கூற்று முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணம் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த சூழ்நிலையின் காரணமாக அழிக்கப்பட்ட ரூபா.165,000 பெறுமதியான சொத்துக்கள் ஏடுகளில் பதிவழிக்கப்படாமையால் உள்ளதனால் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டில் ''யுநெப்ஸ்'' (UNOPS) நிறுவனத்திடமிருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட 03 அலுவலக வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுவரும் ரூபா.17,184 தொகையான களஞ்சிய இருப்புக்கள் பயன்படுத்த முடியாதவையென ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்ச்சியாக சொத்தாக காட்டப்பட்டு வருகின்றன.

### 1.3.4 பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்தவேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1993 ஆம் ஆண்டு தொடக்கம் மின் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.781,370 தொகையை அறவிடுவதற்கு 2015 யூன் 10 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா.1,958,631 தொகையை செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

### 1.3.5 ஆவணச் சான்றுகள் இன்மை

ரூபா.30,883,751 கூட்டு மொத்த பெறுமதியான காணி கட்டிடம், பொறித்தொகுதிகள் இயந்திரங்கள் என்பன தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிதி நிர்வாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் |

விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.4,371,982 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானமாக ரூபா.4,632,844 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.260,862 வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

**(அ) தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான கட்டண அறவீடு**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட மூன்று தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு நிறுவுதல் கட்டணத்தை அறவிடமுடியாமையால் சபை வருடாந்தம் அண்ணளவாக ரூபா.150,000 தொகை வருமானத்தை பாதித்துள்ளது.

**(ஆ) வீதவரிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134, 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 யூன் 10 வரை சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான சந்தைக கடைத்தொகுதியிலுள்ள கடைகளை வாடகைக்குப் பெற்றவர்களிடமிருந்து மீளாய்வாண்டிற்காகப பெறவேண்டிய ரூபா.50,250 தொகையான வாடகையைப் பெற்றுக்கொள்வதற்கு 2015 யூன் 10 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப சட்டம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை சட்டங்களின் பிரகாரம் மீளாய்வாண்டு காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு ரூபா.186,018 தொகையையும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு ரூபா.26,484 தொகையையும் அந் நிதியங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1975 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி இளைப்பாற்றுச் சம்பள விதிகள் மற்றும் 1978 யூன் 07 ஆம் திகதிய 320/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி பிரதேச சபையின் ஒன்பது ஊழியர்களிடம் அறவிடப்பட்ட ஓய்வூதியப் பங்களிப்பும் அந்த ஊழியர்களுக்காக சபையால் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்பும் சேர்ந்த ரூபா.732,927 ஒட்டு மொத்த தொகையை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 05 மோட்டார் வாகனங்களின் உரிமையை சபையின் பெயரில் மாற்றம் செய்வதற்கு 06 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

USAID நிறுவனத்தால் 2012 ஆம் ஆண்டு அன்பளிப்புச் செய்யப்பட்ட அண்ணளவாக ரூபா.500,000 பெறுமதியுடைய உடற்பயிற்சி இயந்திரங்கள் உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தாது 2015 யூன் 10 வரை அலுவலகத்தில் பாவனையற்று உள்ளது.

## 4 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு